adda247 தமிழ்

ஏப்ரல் மாத பதிப்பு

# வெற்றி ADDA247 தமிழ்நாடு மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் தமிழில் 2022 PDF

**TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல**

புதிய கல்விக் கொள்கையை வடிவமைக்க மாநில அளவிலானகுழு - மு.க. ஸ்டாலின் உத்தரவு

கீழடி 8ம்கட்ட அகழாய்வு - ஆறுமுதுமக்கள்தாழிகள் கொந்தகையில் கண்டெடுப்பு

ஆதிச்சநல்லூர் அகழாய்வுப் பணியில் சங்ககாலத்தைச் சேர்ந்த நெல் உமிகள் கண்டெடுப்பு

நெசவு 2022 கைத்தறி கண்காட்சியை மத்திய அமைச்சர் சென்னையில் தொடங்கிவைத்தார்

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்கு 'யுனெஸ்கோ ' அங்கீகாரம்





- Adda247 APPல் தமிழ்நாடு மாநில தேர்வு பிரிவில் பயின்றிடுங்கள்
- கிளிக் செய்க
- தேர்ந்திடு வென்றிடு

*நடப்பு விவகாரங்கள் TNPSC குரூப் 1, TNPSC குரூப் 2/2A, TNPSC குரூப் 4, TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IB அல்லது BIS தேர்வுகளுக்கான தலைப்புச் செய்தி*

**ஆதிச்சநல்லூரில் நாணயங்கள் கண்டெடுப்பு:**

- கடல் ஆமையின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட இரண்டு சங்க கால முத்திரைக் காசுகள் கண்டெடுக்கப்பட்ட ஒரு நிகழ்வானது ஆதிச்ச நல்லூரின் தொல்லியல் வரலாற்றிலேயே முதன் முறையாகும்.
- தூத்துக்குடி மாவட்டத்தின் ஸ்ரீவைகுண்டம் தாலுக்காவிலுள்ள தாமிரபரணியின் கடை மட்டப் பள்ளத்தாக்குப் பகுதியில் இந்த வரலாற்றுத் தளம் அமைந்துள்ளது.
- ஆதிச்ச நல்லூர் என்பது முது மக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டதால் இது பண்டைய காலப் புதையிடமாக பெரும்பாலும் அறியப்பட்டது.
- 1876 ஆம் ஆண்டில் டாக்டர் ஜகோர் எனும் ஒரு ஜெர்மானியத் தொல்லியலாளர் முதல் முறையாக இந்த இடத்தினைக் கண்டறிந்தார்.
- சமீபத்தியக் கண்டுபிடிப்புகளைக் கொண்டு (முத்திரைக் காசுகள்) ஆதிச்ச நல்லூர் என்பது நாணயங்கள் தயாரிக்கும் இடமாக இருந்திருக்கலாம் அல்லது மனிதர்கள் ஆரம்பக் கட்டத்தில் குடியேறிய இடங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம் எனத் தொல்லியல் ஆய்வுகள் கூறுகின்றன.

**காவல் உதவி செயலி:**

- முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் 'காவல் உதவி' என்ற ஒரு செயலியை வெளியிட்டார்.
- பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் அவசரக் காலங்களில் காவல் துறையின் உதவியை நாடும் வகையில், 60 அம்சங்களுடன் இந்தச் செயலி தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தச் செயலியானது அவசர உதவி மற்றும் தொலைபேசி அழைப்பு செய்யும் வசதி (112/100/101) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
- இயக்கத்தில் உள்ள போது புகார் தெரிவிக்கும் வசதி மற்றும் இருப்பிடத்தைப் பகிர்ந்து கொள்ளும் வசதியும் இதில் உள்ளது.

**மாநிலக் கல்விக் கொள்கை:**

- டெல்லி உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி முருகேசன் என்பவரின் தலைமையில் 13 பேர் கொண்ட ஒரு குழுவை தமிழக அரசு அமைத்தது. ஓராண்டுக்குள் புதிய கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கான பரிந்துரைகளை இந்தக் குழு அளிக்கும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

- இந்தக் குழுவின் இதர மற்ற உறுப்பினர்கள்: சவீதா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் L. ஜவஹர் நேசன், கணித அறிவியல் நிறுவனத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் R. ராமானுஜம், மாநில திட்டக் குழு உறுப்பினர்களான சுல்தான் இஸ்மாயில் மற்றும் R. ஸ்ரீனிவாசன், யுனிசெ்ப் அமைப்பின் முன்னாள் கல்வி நிபுணர் அருணா ரத்னம், தமிழ் எழுத்தாளர் S. ராம கிருஷ்ணன், முன்னாள் உலக சதுரங்கச் சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த், இசைக் கலைஞர் T.M.கிருஷ்ணா , கல்வியாளர்கள் துளசி தாஸ் மற்றும் S.மாடசாமி, கீச்சாங் குப்பத்தில் உள்ள அரசு ஊராட்சி ஒன்றிய நடு நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் R. பாலு, அகரம் அறக்கட்டளையைச் சேர்ந்த ஜெயஸ்ரீ தாமோதரன் ஆகியோர் ஆவர்.




**நகர்ப் புற மகளிர் பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்க 'பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம்' - ஆர். பிரியா தொடங்கி வைத்தார்:**

- நகர்ப் புற மகளிர் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை உருவாக்கவும், மகளிர் பாதுகாப்பு திட்டமான நிர்பயா திட்டத்தை கண்காணிக்கவும் மாநகராட்சி சார்பில் 'பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் சேவையை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா தொடங்கி வைத்தார்.
- சென்னை மாநகராட்சி சார்பில் பாலின நிகர் மேம்பாடு மற்றும் கொள்கை ஆய்வகம் மற்றும் பயிற்சி கருத்தரங்கம் ரிப்பன் மாளிகை வளாகத்தில் நடைபெற்றது. இதில் மாநகராட்சி மேயர் ஆர். பிரியா பங்கேற்று கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.

**ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்கு 'யுனெஸ்கோ ' அங்கீகாரம்:**

- 'யுனெஸ்கோ ' அங்கீகாரம் பெறுவதற்கான பட்டியலில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலும், பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸ் பொற்கோவிலும் இடம் பெற்றுள்ளதாக, மத்திய கலாசார அமைச்சம் தெரிவித்துள்ளது.

- உலக அளவில் பாரம்பரிய, கலாசார இடங்களை கண்டறிந்து, அதை யுனெஸ்கோ அமைப்பு அடையாளப்படுத்தி வருகிறது.

**மார்ச் 2022 மாதத்துக்கான ஜிஎஸ்டி வசூல்:**

- கடந்த மார்ச் மாதத்துக்கான ஜிஎஸ்டி வசூல் விவரங்களை ஒன்றிய நிதி அமைச்சகம் வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது: கடந்த மார்ச் மாதத்தில் மொத்தம் 11 லட்சத்து 42 ஆயிரத்து 95 கோடி ஜிஎஸ்டி வசூல் ஆகியுள்ளது.
- இதில், ஒன்றிய ஜிஎஸ்டி ₹25,830 கோடியாகவும், மாநில ஜிஎஸ்டி ₹132,378 கோடியாகவும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ₹174,470 கோடியாகவும் உள்ளது. ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி வசூலில், இறக்குமதி பொருட்கள் மூலம் வசூலான ₹39,131 கோடியும் அடங்கும்.
- இது போல், செஸ் வரி ₹19,417 கோடி வசூலாகியுள்ளது. இதில், இறக்குமதி பொருட்கள் மீதான வரிகள் மூலம் ₹1981 கோடி கிடைத்துள்ளது.
- கடந்த மாத ஜிஎஸ்டி வசூல், முந்தைய ஆண்டு இதே மாதம் வசூலானதை விட 15 சதவீதம் அதிகம். மேலும், ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டதில் இருந்து இதுவரை இல்லாத அளவுக்கு ஜிஎஸ்டி வசூலாகி புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.
- கடந்த 2017 ஜூலை 1ம் தேதி ஜிஎஸ்டி அமல்படுத்திய பிறகு, அதிக பட்சமாக கடந்த ஜனவரி மாதம் ரூ.1.40 லட்சம் கோடி வசூலானது குறிப்பிடத்தக்கது.

**'டாப் 10' கோடீஸ்வரர் - அதானி இடம் பிடித்தார்:**

- துறைமுகம், சுரங்கம், பசுமை எரி சக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அதானி குழுமம் ஈடுபட்டுள்ளது. இக்குழுமத்தின் தலைவர் கவுதம் அதானியின் சொத்து மதிப்பு இந்தாண்டில் மட்டும், 1.80 லட்சம் கோடி ரூபாய் உயர்ந்துள்ளது.
- இதையடுத்து இவரின் மொத்த சொத்து, 3.20 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இதன் வாயிலாக அவர் உலகின் 'டாப் 10' கோடீஸ்வரர்கள் பட்டியலில் இணைந்துள்ளார்.



- இந்த பட்டியலில் முதலிடத்தில் 'டெஸ்லா ' குழுமத் தலைவர் எலன் மஸ்க், இரண்டாவது இடத்தில் அமேசான் குழுமத் தலைவர் ஜெப் பெசோஸ் உள்ளனர்.
- கடந்த பிப்ரவரியில் ரிலையன்ஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானியை பின்னுக்குத் தள்ளி ஆசியாவின் பெருங்கோடீஸ்வரர் என்ற சிறப்பை கவுதம் அதானி பெற்றார். தற்போது, உலகின் முதல், 10 கோடீஸ்வரர்களின் பட்டியலில் இணைந்துள்ளதாக, புளூம் பெர்க் நிறுவனம் வெளியிட்டுள்ள உலக கோடீஸ்வரர்கள் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரியற்ற பரஸ்பர வர்த்தகம் இந்தியா – ஆஸ்திரேலியா ஒப்பந்தம்:**

- இந்திய பெருங்கடலுக்கும், பசிபிக் பெருங்கடலுக்கும் இடையே உள்ள தீவு நாடு ஆஸ்திரேலியா. இந்நாட்டுடன், இந்தியா வரியற்ற பரஸ்பர வர்த்தகம் ஒப்பந்தம் செய்துள்ளது.
- 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக பிரதமர் மோடி, ஆஸ்திரேலியா, பிரதமர் ஸ்காட் மாரிசன் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.
- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியுஷ் கோயல், ஆஸ்திரேலியா வர்த்தகத் துறை அமைச்சர் டான் டெஹன் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தால், இந்தியாவின் ஜவுளி, ஆயத்த ஆடை, வேளாண் மற்றும் கடல் உணவுப் பொருட்கள், தோல், காலணிகள், ஆபரணங்கள், இயந்திரங்கள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதியாளர்கள் பயன்பெறுவர். இப்பொருட்கள் ஏற்றுமதிக்கு ஆஸ்திரேலியா தற்போது 4 - 5 சதவீத சுங்க வரி விதிக்கிறது.
- புதிய ஒப்பந்தம் காரணமாக இப்பொருட்களை வரியின்றி ஆஸ்திரேலியா இறக்குமதி செய்யும். அது போல, ஆஸ்திரேலியாவின் மூலப் பொருட்கள், தாதுப் பொருட்கள், நிலக்கரி உள்ளிட்டவற்றை, இந்தியாவில் வரியின்றி இறக்குமதி செய்யலாம்.

**நெசவு 2022 கைத்தறி கண்காட்சியை மத்திய அமைச்சர் சென்னையில் தொடங்கி வைத்தார்:**

- இந்திய கைத்தறித் தயாரிப்புகள் மற்றும் கைவினைத் திறனை ஊக்குவிக்கும் முயற்சியில், நெசவாளர்களின் கைவினைப் பொருட்களைக் கொண்ட "நெசவு 2022" கைத்தறி கண்காட்சியை மத்திய குடிசைத் தொழில் கழகம் நடத்துகிறது.

- 2022 ஏப்ரல் 2 முதல் 12 வரை, சென்னை நந்தனம் அண்ணா சாலையில் அமைந்துள்ள டெம்பிள் டவர் கட்டிடத்தில் உள்ள ஷோரூமில், காலை 10:30 முதல் இரவு 8:00 மணி வரை கண்காட்சி நடைபெறுகிறது.
- மத்திய ஜவுளித் துறை இணை அமைச்சர் திருமதி தர்ஷனா விக்ரம் ஜர்தோஷ் கண்காட்சியை தொடங்கி வைத்தார். சென்னை நந்தனம் அண்ணா சாலையில் அமைந்துள்ள டெம்பிள் டவர் கட்டிடத்தில் 13,000 சதுர அடியில் முழு குளிரூட்டப்பட்ட விற்பனையகத்தை மத்திய குடிசைத் தொழில் கழகம் கொண்டுள்ளது.
- நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பிரத்தியேகமாக கையால் நெய்யப்பட்ட புடவைகள், சால்வைகள், துணிகள், ஆடைகள், அணிகலன்கள், தளவாடங்கள், வீட்டுத் துணிகள் மற்றும் பலவற்றைக் கண்காட்சி காட்சிப்படுத்துகிறது.
- வளமான ஜவுளி பாரம்பரியத்தை இந்தியா கொண்டுள்ளது. கண்காட்சி இதை வெளிப்படுத்துவதோடு, நெசவாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்களிடையே கலாச்சார மற்றும் கலை பரிமாற்றத்திற்கான ஒரு தளமாகவும் உள்ளது.
- பெருமையுடன் கைத்தறிகளை அணிய பார்வையாளர்களை ஊக்குவிப்பதும், கைத்தறி பொருட்களை அவர்களது அன்றாட வாழ்வில் பின்பற்ற வைப்பதும் கண்காட்சியின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.
- இந்திய நெசவாளர்கள் மற்றும் ஜவுளிக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை இத்தகைய முன் முயற்சிகள் தக்க வைத்து, அவர்களுக்கு அதிக சந்தை வாய்ப்புகளை அளித்து, தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிக்கும்.

**நடப்பாண்டில் 3101 ரயில் பெட்டி தயாரித்து அசத்தியது ஐ.சி. எப்.**

- சென்னையில் உள்ள ஐ.சி. எப். எனும் ரயில் பெட்டி இணைப்பு தொழிற்சாலையில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் இயங்கும் 'வந்தே பாரத்' ரயில் பெட்டிகள் தயாரித்து சாதனை படைத்துள்ளது. மேலும் 'வந்தே பாரத்' ரயில் பெட்டி தயாரிப்பு திட்டத்தில் பெட்டிகள் தயாரிப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன.

- ஐ.சி. எப். பில் 2019 - 2020 ல் 4238 பெட்டிகள் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.
- கொரோனா ஊரடங்காலும் ரயில் பெட்டி தயாரிப்பு தளவாடங்கள் இயந்திரங்கள் உதிரிப் பாகங்கள் தட்டுப்பாட்டாலும் 4166 பெட்டிகளே தயாரிக்க முடிந்தது. இதே நிலை தொடர்ந்ததால் 2020 - 2021 ம் ஆண்டில் 1954 பெட்டிகள் மட்டுமே தயாரிக்கப்பட்டன.
- இந்த நிலையில் 2021 - 2022 ம் ஆண்டில் 3678 பெட்டிகள் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.
- தளவாடங்கள் உரிய காலத்தில் கிடைக்காததால் 3100 பெட்டிகள் என இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.
- தயாரிப்பு பணிகளும் துரிதப்படுத்தப்பட்டன. ரயில்களில் நவீன தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்படும் 'லிங் ஹாப்மென் புஸ்' என்கிற எல். எச்.பி. பெட்டிகள் அதிகம் சேர்க்கப்பட்டு வருவதால் இப்பெட்டிகள் அதிகம் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. இதையொட்டி நிர்ணயித்திருந்த இலக்கை விட 1 பெட்டி கூடுதலாக 3101 பெட்டிகள் தயாரித்து ஐ.சி. எப். சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**ஆதிச்ச நல்லூர் அகழாய்வுப் பணியில் சங்க காலத்தைச் சேர்ந்த நெல் உமிகள் கண்டெடுப்பு:**

- மத்திய தொல்லியல் துறை சார்பில், ஆதிச்ச நல்லூரில் அகழாய்வுப் பணி கடந்த அக்டோபரில் தொடங்கி நடைபெற்று வருகிறது.
- 3 இடங்களில் 32 குழிகள் தோண்டப்பட்டுள்ளன. 62க்கும் மேற்பட்ட முது மக்கள் தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. குடுவைகள், பானைகள், இரும்பு பொருட்கள், மணிகள் என ஏராளமான தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளன.
- கடந்த 2 தினங்களுக்கு முன்னர் அகழாய்வு பணியில் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த 2 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அகழாய்வு நடைபெறும் 3 பகுதிகளில் ஒரு இடம் தாமிர பரணி ஆற்றின் கரையோரம் அமைந்துள்ளது.



- கடந்த 1902 - ம் ஆண்டு அலெக்சாண்டர் ரியா என்ற ஆங்கிலேயர் அகழாய்வு செய்த இடத்தின் அருகே, இந்த அகழாய்வுப் பணி நடந்து வருகிறது. இந்த இடத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் பெரிய முது மக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த தாழியில் இருந்து, நெல் உமிகள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. தாழியைச் சுற்றி 100 - க்கும் மேற்பட்ட மண் கலயங்கள், சிறு பானைகள், இரும்பு வாள் ஆகியவை கிடைத்தன. எனவே, பழங்காலத்தில் வாழ்ந்த தலைவன் அல்லது போர் வீரனின் தாழியாக இது இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இப்பணி விரைவில் நிறைவுற்று, அருங்காட்சியகம் அமைக்கும் பணி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒலி பரப்புத் துறையில் தொழில் தொடங்குவதை எளிமையாக்க தனி இணைய தளம் தொடங்கியது மத்திய அரசு:**

- ஒலி பரப்புத் துறை சார்ந்த தொழில் தொடங்குவதை எளிமையாக்கும் நோக்கில் அதற்கென்று தனி இணைய தளத்தை மத்திய தகவல் மற்றும் ஒலி பரப்புத் துறை அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- 'ப்ராட் கேஸ்ட் சேவா போர்ட்டல்' என்ற அந்த தளம் மூலமாக, ஒலி பரப்புத் துறை சார்ந்த தொழில்களில் ஈடுபடுபவர்கள் தொழிலுக்கான அனுமதி, உரிமம், பதிவு, புதிப்பித்தல் உள்ளிட்ட நடைமுறைகளை எளிமையாக மேற்கொள்ள முடியும் என்று அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**கீழடி 8 ம் கட்ட அகழாய்வு - ஆறு முது மக்கள் தாழிகள் கொந்தகையில் கண்டெடுப்பு:**

- சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் தொல்லியல் துறை சார்பில் 8 ம் கட்ட அகழாய்வு பணிகள் நடந்து வருகின்றன.
- முதல் கட்டமாக ஒரு குழி தோண்டப்பட்டு வருகிறது. இதில் ஆறு முது மக்கள் தாழிகளின் மேற் பகுதி தென்பட்டுள்ளது.
- கொந்தகையில் இதுவரை நடந்த அகழாய்வில் வெவ்வேறு காலக் கட்டங்களைச் சேர்ந்த முது மக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.
- தற்போது கிடைத்துள்ள தாழிகளை முழுமையாக வெளி கொண்டு வரும் பணி நடந்து வருகிறது.
- அகரத்தில் கடந்த முறை அகழாய்வு நடந்த இடத்தின் அருகே ஒரே ஒரு குழி மட்டும் தோண்டப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

**புதிய கல்விக் கொள்கையை வடிவமைக்க மாநில அளவிலான குழு - மு.க. ஸ்டாலின் உத்தரவு:**

- கடந்த 2021- 22- ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாட்டின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர் காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப, மாநிலத்திற்கெனத் தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு, கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை இந்த அரசு அமைக்கும்' என அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் விதமாக, தமிழகத்தில் தற்போது இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.
- டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி முருகேசன் தலைமையில் புதிய கல்விக் கொள்கைக்கான குழுவை தமிழக அரசு அமைத்திருக்கிறது. இக்குழுவின் உறுப்பினர்களாக பேராசிரியர் எல். ஜவஹர்நேசன், இராமானுஜம், பேராசிரியர் சுல்தான் இஸ்மாயில், பேராசிரியர் திரு. இராம சீனிவாசன், முனைவர் அருணா ரத்னம், எஸ். இராம கிருஷ்ணன், விஸ்வ நாதன் ஆனந்த், டி. எம். கிருஷ்ணா, துளசி தாஸ், முனைவர் ச. மாடசாமி, இரா. பாலு, தலைமை ஆசிரியர், ஜெயஸ்ரீ தாமோதரன் ஆகிய 12 பேர் இந்த மாநில கல்விக் கொள்கை குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

**ரூ.500 கோடி மதிப்பீட்டில் காலணி தயாரிக்கும் தொழிற்சாலை - முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்:**

- பெலாக் குப்பம் சிப்காட் தொழிற் பூங்கா வளாகத்தில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் காலணி தயாரிக்கும் தொழிற்சாலை தமிழ் நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.
- விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெலாக் குப்பம் சிப்காட் தொழிற் மையத்திற்கு 634.42 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு தொழில் முனைவோருக்கு அனைத்து உட் கட்டமைப்பு வசதிகளும் வழங்கிடும் வகையில் தயார் படுத்தப்பட்டுள்ளது.
- இதன் முதற் கட்டமாக, லோட்டஸ் புட்வேர் எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான M/S செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தொழிற்சாலை அமைத்திட 167.41 ஏக்கர் இடம் வழங்கப்பட்டு, அந்நிறுவனம் மூலம் ரூ.500 கோடி மதிப்பீட்டில் தொழில் தொடங்கிட உள்ளது.

**வெள்ள நிவாரணத்திற்காக ரூ.566.36 கோடி தமிழ் நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது:**

- புயல், வெள்ளம் உள்ளிட்ட இயற்கை பேரிடர் காலங்களில் மாநில அரசுகள் நிவாரண நடவடிக்கைகளை மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்கின்றன.
- கூடுதலான நிதியுதவி தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.
- இதன் படி தமிழ் நாட்டிற்கு ரூ.566.36 கோடி வெள்ள நிவாரணத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

**மாநிலங்களவையிலும் நிறைவேறியது குற்றவியல் நடை முறை சட்ட மசோதா:**

- மக்களவைத் தொடர்ந்து மாநிலங்களவையில் குற்றவியல் நடைமுறை சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு குரல் வாக்கெடுப்பு மூலம் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது.
- குற்றவியல் நடை முறை சட்டத்தில், குற்றவாளிகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டோர் குறித்த பயோ மெட்ரிக் எனும் உருவ அடையாளங்களை பதிவு செய்யும் அதிகாரத்தை காவல் துறைக்கு வழங்கும் மசோதா மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.
- ஏற்கெனவே குற்றவியல் நடை முறை மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இதன் காரணமாக சட்டமாக மாறுவதற்கான ஒப்புதல் கேட்டு மசோதா குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

**ரூ. 14,000 கோடி முதலீட்டில் 48,000 மின்சார 'சார்ஜ்' மையம்:**

- இந்தியாவில் பொது இடங்களில் 2,000 த்திற்கும் குறைவாகவே மின்சார வாகனங்களை சார்ஜ் செய்யும் நிலையங்கள் உள்ளன. வரும் 2024 - 25 ம் நிதியாண்டில், மின்சாரத்தில் இயங்கும் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் விற்பனை முறையே, 15 சதவீதம் மற்றும் 30 சதவீதம் அதிகரிக்கும்.
- மின்சார பஸ் போக்குவரத்து 8 - 10 சதவீதம் உயரும். அதற்கேற்ப மின் சார்ஜ் நிலையங்கள் அனைத்து பகுதிகளிலும் அமைக்க வேண்டும். இதற்காக மத்திய அரசு, 'பேம்' திட்டத்தின் கீழ், 1,300 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.
- இது தவிர ஏராளமான தனியார் நிறுவனங்கள் மின் வாகன சார்ஜ் மையங்களை அமைக்க உள்ளதாக அறிவித்துள்ளன. அதன் அடிப்படையில் அடுத்த 3 - 4 ஆண்டுகளில் 14 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், 48 ஆயிரத்திற்கும் அதிகமான மின் வாகன சார்ஜ் மையங்கள் அமைய உள்ளன.

- இதற்கான பெரும்பாலான சாதனங்கள், சீனா, தைவான் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதியாகின்றன. இவற்றை உள் நாட்டில் தயாரித்தால், சார்ஜ் நிலையங்களை அமைக்கும் செலவு குறையும்.

**பட்டயக் கணக்காளர்கள், செலவுகள் மற்றும் பணி கணக்காளர்கள், அலுவலக செயலாளர்கள் சட்டத் திருத்த மசோதா, 2022 200 - க்கும் மேற்பட்ட திருத்தங்ககளுடன் நிறைவேற்றப்பட்டது:**

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமன், நாடாளுமன்ற மக்களவையில், பட்டயக் கணக்காளர்கள், செலவுகள் மற்றும் பணி கணக்காளர்கள், அலுவலக செயலாளர்கள் சட்டத் திருத்த மசோதா, 2022 - ஐ அறிமுகம் செய்தார்.




- இதன் மீதான வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டு கடந்த மார்ச் 30 ஆம் தேதி மக்களவையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து மாநிலங்களவையில் இந்த மசோதா விவாதத்திற்கு வந்தது.
- மசோதா மீதான வாக்கெடுப்பின் போது, அதன் உட் பிரிவுகளை சுட்டிக் காட்டி மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. ஜாம் பிரிட்டாஸ் 163 திருத்தங்களை கொண்டு வந்து நோட்டீஸ் கொடுத்தார்.
- அதாவது மசோதாவில் உள்ள பெரும்பாலான உட் பிரிவுகளில் திருத்தத்தை அவர் நாடினார். அவரை போல் இந்திய கம்யூனிஸ்டு எம்.பி. பினோய் விஸ்வம் 20 உட் பிரிவுகளில் திருத்தம் கொண்டு வந்தார்.
- இப்படி மொத்தம் 200 - க்கும் மேற்பட்ட திருத்தங்கள் மாநிலங்களவை உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக குரல் வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டன.
- இறுதியாக பட்டயக் கணக்காளர்கள், செலவுகள் மற்றும் பணி கணக்காளர்கள், அலுவலக செயலாளர்கள் சட்டத்திருத்த மசோதா, 2022 நிறைவேற்றப்பட்டது.

**தைவான் நாட்டைச் சார்ந்த ஹாங் ஃபூ (Hong Fu) தொழில் குழுமத்துடன், தமிழ் நாட்டில் தொழில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்:**

- தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில், நேற்று தலைமைச் செயலகத்தில், உலக அளவில் காலணிகள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் தைவான் நாட்டைச் சார்ந்த ஹாங் ஃபூ (Hong Fu) தொழில் குழுமத்துடன், தமிழ் நாட்டில் தொழில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.
- இதன் மூலம், அடுத்த 3 முதல் 5 ஆண்டுகளில், படிப்படியாக 1000 கோடி ரூபாய் வரை முதலீடு மற்றும் 20,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.
- இத்தொழில் திட்டத்தின் மூலம் பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்பு அளிக்கப்படும். இந்த முதலீடு தமிழ் நாட்டில் காலணிகள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு பெரும் ஊக்கத்தை அளிக்கும்.

**தமிழக மின் துறைக்கு ரூ. 7,054 கோடி நிதி ஒன்றிய அரசு அறிவிப்பு:**

- 15 வது நிதிக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில், மாநிலங்களுக்கு மொத்த உள் நாட்டு உற்பத்தி விகிதத்தில் 0.5 சதவீதம் வரை கூடுதல் கடன் வழங்க ஒன்றிய நிதியமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- குறிப்பாக, 2021- 22 ல் மின் துறை சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக தமிழ் நாடு உள்ளிட்ட 10 மாநிலங்களுக்கு ஒன்றிய நிதியமைச்சகத்தின் செலவினத் துறை ரூ. 28,204 கோடி கூடுதல் கடன் பெறுவதற்கு தற்போது அனுமதி அளித்துள்ளது.
- இதில், தமிழகத்திற்கு மட்டும் அதிக பட்சமாக ரூ. 7,054 கோடி கூடுதல் கடன் தொகை பெறுவதற்கு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**முல்லை பெரியாறு அணை பாதுகாப்பில் கண்காணிப்பு குழுவுக்கு முழு அதிகாரம் - உச்ச நீதிமன்றம் உத்தரவு:**

- கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் முல்லை பெரியாறு அணை அமைந்துள்ளது. இந்த அணை தொடர்பாக கேரளா, தமிழகம் இடையே பிரச்சினை இருந்து வருகிறது.
- கடந்த 2005 -ம் ஆண்டில் அணை கண்காணிப்பு குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்தது. இந்தக் குழு ஆய்வு செய்து, அணை பாதுகாப்பாக இருக்கிறது என்பதை உறுதி செய்தது. மேலும், அணை பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த குழுவின் செயல்பாட்டுக்கு கேரள அரசு தடையாக உள்ளது.

- இந்தச் சூழலில் முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பு, நீர் தேக்கி வைக்கும் அளவு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் இரு மாநிலங்கள் சார்பில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.
- இந்த மனுக்களை நீதிபதிகள் ஏ. எம். கான் வில்கர், ஏ. எஸ். ஒகா, சி.டி. ரவிக் குமார் ஆகியோரைக் கொண்ட அமர்வு விசாரித்து வருகிறது.
- இந்த வழக்கில் தமிழக, கேரள அரசுகள் தங்கள் தரப்பு வாதங்களை முன் வைத்தன. வழக்கு விசாரணையின் போது முல்லை பெரியாறு அணை கண்காணிப்பு குழுவை மாற்ற வேண்டும் என்று கேரள அரசு வலியுறுத்தியது. இதை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து நீதிபதி கான் வில்கர் அமர்வு இடைக் கால உத்தரவை பிறப்பித்தது.
- முல்லை பெரியாறு அணை கண்காணிப்புக் குழுவில் மத்திய நீர் ஆணையத்தை சேர்ந்த பிரதி நிதி மற்றும் தமிழகம், கேரளாவைச் சேர்ந்த தலா ஒரு பிரதி நிதி இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழுவின் செயல்பாடு திருப்திகரமாக உள்ளது.
- கண்காணிப்புக் குழுவை மேலும் வலுப்படுத்த தமிழகம், கேரளாவில் இருந்து கூடுதலாக தலா ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டும். அடுத்த 2 வாரங்களில் இரு மாநில அரசுகளும் கூடுதல் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும்.
- கண்காணிப்புக் குழுவுக்கு தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்க வேண்டும். அப்போது தான் குழு தனது பணிகளை சிறப்பாக மேற்கொள்ள முடியும். அணையின் பாதுகாப்பு தொடர்பான அனைத்து விவகாரங்கள் குறித்தும் கண்காணிப்புக் குழு ஆய்வு செய்து முடிவு எடுக்கும்.
- இந்தக் குழுவின் உத்தரவுகளை இரு மாநில தலைமைச் செயலாளர்களும் நிறைவேற்ற வேண்டும். அதற்கு அவர்களே பொறுப்பாளிகள் ஆவர்.
- கண்காணிப்புக் குழுவுக்கு இரு மாநில அரசுகளும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அணையின் பராமரிப்புப் பணிகளை குறித்த காலத்தில் மேற்கொள்ள வேண்டும்.
- உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அணை பாதுகாப்புச் சட்டத்துக்கு கடந்த 2021 டிசம்பர் 13 -ம் தேதி குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- அணைகளின் பராமரிப்பு, செயல்பாடு தொடர்பான அனைத்து அம்சங்களும் புதிய சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. புதிய சட்டத்தின் படி தேசிய அணை பாதுகாப்பு ஆணையம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் வரை முல்லை பெரியாறு அணை கண்காணிப்புக் குழு தொடர்ந்து செயல்படலாம்.

**'அனிமேஷன்' துறையை ஊக்குவிக்க பணிக் குழு அமைத்தது மத்திய அரசு:**

- அனிமேஷன், விஷுவல் எபெக்ட்ஸ், கேமிங், காமிக்ஸ்' துறைகளில், 2025 க்குள் 5 சதவீத சர்வதேச சந்தை மதிப்பை கைப்பற்றும் திறன் நம் நாட்டுக்கு உள்ளது. இதன் மதிப்பு 3 லட்சம் கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.
- ஆண்டு தோறும் 1.60 லட்சம் வேலை வாயப்புகளை உருவாக்க கூடிய இத்துறை, ஆண்டுக்கு 25 - 30 சதவீத வளர்ச்சி அடைய உள்ளது.
- தேசிய கொள்கை, இத்துறையை ஊக்குவிக்கவும், இது தொடர்பான உயர் கல்விக்கான தேசிய பாட திட்ட கட்டமைப்பை பரிந்துரைக்கவும் பணிக் குழு உருவாக்கப்பட்டு உள்ளது. இத்துறையில் அதிக எண்ணிக்கையிலான இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்க்க இப்பணிக் குழு ஈடுபடும். இந்த குழுவுக்கு மத்திய தகவல் மற்றும் ஒலி பரப்புத் துறை செயலர் தலைமை வகிப்பார்.
- இதில், மத்திய திறன் மேம்பாட்டுத் துறை, உயர் கல்வித் துறை, மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை, தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை செயலர்கள் இடம் பெறுவர்.
- இந்த பணிக் குழு தங்கள் முதல் செயல் திட்ட அறிக்கையை 90 நாட்களுக்குள் சமர்ப்பிக்கும். இத்துறை தொடர்பான தேசிய கொள்கை வகுக்கும் பொறுப்பையும் இக்குழு ஏற்கும்.

**செயல்படாத நிலக்கரி சுரங்கங்களை அபராதம் இன்றி ஒப்படைக்க அரசு நிறுவனங்களுக்கு ஒரு முறை வாய்ப்பு வழங்க அமைச்சரவை ஒப்புதல்**:

- செயல்படாத சுரங்கங்களை அபராதமின்றி மற்றும் எந்த காரணத்தையும் குறிப்பிடாமல் ஒப்படைக்க மத்திய மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒரு முறை வாய்ப்பு வழங்குவதற்கான நிலக்கரி அமைச்சகத்தின் முன் மொழிவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- நிலக்கரி சுரங்கங்களை ஒப்படைக்க கொள்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத கால அவகாசம் அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.
- 2021 டிசம்பர் வரை அரசு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 73 நிலக்கரி சுரங்கங்களில் 45 சுரங்கங்கள் செயல்படாமல் இருந்தன, மேலும் 19 நிலக்கரி சுரங்கங்களில் சுரங்கச் செயல்பாடுகள் தொடங்குவதற்கான காலக்கெடு முடிந்துவிட்டது.

- ஒதுக்கீட்டாளர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் தாமதம் ஏற்பட்டது. நாட்டின் எரி சக்தி பாதுகாப்பில் நிலக்கரி துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தரமான நிலக்கரிச் சுரங்கங்கள், தொழில் நுட்பச் சிக்கல்களை நீக்கி, எல்லைகளை சரி செய்த பிறகு விரைவாக மறு சுழற்சி செய்து, ஆர்வமுள்ள தரப்பினருக்கு வழங்கப்படலாம்.
- இந்த நடவடிக்கை மூலம் வேலை வாய்ப்பு அதிகரிக்கும், முதலீடு அதிகரிக்கும். நாட்டின் பின் தங்கிய பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இது பங்களிக்கும். நாட்டில் நிலக்கரி இறக்குமதியை இது குறைக்கும்.

**மத்திய பல்கலைக் கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும் – சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம்:**

- மத்திய பல்கலைக் கழகங்களில் மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், தமிழக சட்டப் பேரவையில் இது குறித்து அரசினர் தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.
- இதைத் தொடர்ந்து, தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒரு மனதாக நிறைவேறியதாக பேரவைத் தலைவர் மு. அப்பாவு அறிவித்தார்.

**முதல்வர் ஸ்டாலின் தலைமையில் வன உயிரின வாரியம் அமைப்பு - 28 உறுப்பினர்கள் நியமனம்:**

- தமிழகத்தில் உள்ள வன உயிரினங்களை பாதுகாக்கும் வகையில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் வன உயிரின வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.
- இதன் துணைத் தலைவராக வனத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மேலும் இந்த வாரியத்தில் 3 எம் எல் ஏக்கள், தொண்டு நிறுவனத்தை சேர்ந்த 3 பேர், சுற்றுச் சூழல் சார்ந்த வல்லுநர்கள் 8 பேர், அரசுத் துறை அலுவலர்கள் 14 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- அதன் படி, எம் எல் ஏக்கள் பிரிவில் கம்பம் தொகுதி எம் எல் ஏ என். ராம கிருஷ்ணன். சங்கரா புரம் தொகுதி எம்எல்ஏ டி. உதய சூரியன், பழனி தொகுதி எம்எல்ஏ ஐ.பி. செந்தில் குமார் ஆகியோரும், தொண்டு நிறுவனங்கள் பிரிவில் 'நீலகிரி கீ ஸ்டோன்' அறக் கட்டளையைச் சேர்ந்த பிரதிம் ராய், 'கோவை ஓசை' அமைப்பைச் சேர்ந்த கே. காளி தாசன், தேனி நலம் மருத்துவமனை மருத்துவர் சி.பி. ராஜ் குமார் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**பூம்புகார் மாநில விருதுக்கு 'தஞ்சாவூர் நெட்டி' கைவினைக் கலைஞர் ஆர். ராதா தேர்வு:**

- தமிழகத்தில் ஆண்டு தோறும் சிறந்து விளங்கும் கைவினைக் கலைஞர்களுக்கு தமிழ் நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 'பூம்புகார் மாநில விருது' வழங்கி, ஊக்கப்படுத்தி வருகிறது.
- அதன்படி, 2021- 22- ம் ஆண்டுக்கான பூம்புகார் மாநில விருதுக்காக 'தஞ்சாவூர் நெட்டி' கைவினைக் கலைஞரான தஞ்சாவூர் புதிய குடியிருப்பு வாரியத்தில் வசித்து வரும் ஆர். ராதா (66) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**இந்திய போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நவீன தகவல் தொடர்பு மற்றும் விபத்து தடுப்பு தொழில் நுட்பத்துடன் கூடிய போக்குவரத்து முறை இன்ட்ரான்ஸ் - II திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது:**

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் முன் முயற்சியாக இந்திய நகரங்களுக்கான நவீன தகவல் தொடர்பு மற்றும் விபத்து தடுப்பு தொழில் நுட்பத்துடன் கூடிய போக்குவரத்து முறை தொடங்கப்பட்டுள்ளது.
- உள் நாட்டிலேயே உருவாக்கப்பட்டு வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் ஓட்டுநர் உதவி மற்றும் எச்சரிக்கை நடை முறை (ஓடிஏடபுள்யுஎஸ்), பேருந்து சிக்னல் முன்னுரிமை நடை முறை, சிஓஎஸ்எம்ஐசி ஆகிய மென் பொருள்களை கொண்டு இந்த போக்குவரத்து முறை தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த நடை முறை நவீனமாக்கப்பட்ட கணினி மேம்பாட்டு மையம், சென்னையில் உள்ள இந்திய தொழில் நுட்ப கல்விக் கழகம் (ஐஐடி) ஆகியவை இணைந்து உருவாக்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு தொழில் துறை கூட்டாளியாக மஹிந்திரா & மஹிந்திரா இருந்தது.

**'சமபந்தி போஜனம்' இனி 'சமத்துவ விருந்து' என்று அழைக்கப்படும் - முதல்வர் மு.க. ஸ்டாலின்:**

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம் முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.

- சட்டப் பேரவை உறுப்பினர் சிந்தனைச் செல்வன் என்னை சந்தித்து, ஆகஸ்ட் 15 விடுதலை நாள் உள்ளிட்ட முக்கிய நாட்களில் இதுவரை நடைபெற்று வந்த 'சமபந்தி போஜனம்' என்பதை பெயர் மாற்ற வேண்டுகோள் விடுத்தார். அவரது வேண்டுகோளை ஏற்று இனிமேல் 'சமத்துவ விருந்து' என்று பெயர் மாற்றம் செய்யப்படும்.

**ரெய்காவிக் பிரக்ஞானந்தாவின் சாம்பியன்:**

- கடந்த சில மாதங்களுக்கு முன் தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரக்ஞானந்தா, உலக அளவிலான 'ஏர் திங்ஸ் மாஸ்டர்ஸ் ரேபிட்' இணைய வழி சதுரங்கப் போட்டியில் பங்கேற்று, உலகத் தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் நார்வே நாட்டு வீரர் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தி இளம் வயதிலேயே சாதனை புரிந்தார்.




- ரெய்காவிக் 2022 ஆம் ஆண்டின் ஓபன் செஸ் போட்டியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த இளம் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா, சாம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.

**பருத்தி இறக்குமதிக்கான சுங்க வரி முழுமையாக ரத்து - மத்திய அரசு அறிவிப்பு:**

- பருத்தி மற்றும் நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்று ஜவுளித் துறை உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்த நிலையில், பருத்தி இறக்குமதிக்கான சுங்க வரி மத்திய அரசால் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

**தமிழகம் முழுவதும் ஏப்ரல் 14 - ம் தேதி சமத்துவ நாளாக கொண்டாடப்படும் - முதல்வர் மு.க. ஸ்டாலின்:**

- தமிழ் நாடு சட்ட பேரவையில் துறை வாரியான மானிய கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சட்ட பேரவையில் 110 விதியின் கீழ் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின் ஏப்ரல் 14 -ம் தேதி இனி சமத்துவ நாளாகக் கொண்டாடப்படும் என்றும், சமத்துவ நாள் உறுதி மொழி தமிழ் நாடு முழுவதும் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கோழி வளர்ப்பில் தமிழ்நாடு முதலிடம் - கொள்கை விளக்கக் குறிப்பில் தகவல்:**

- தமிழக சட்டப் பேரவையில் இன்று கால் நடை, வேளாண்மை, பால் வளம் உள்ளிட்ட துறைகள் மீதான விவாதம் நடை பெற்று வரும் நிலையில், பல்வேறு துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகளை துறை சார்ந்த அமைச்சர்கள் தாக்கல் செய்து வருகின்றன.
- அந்த வகையில், கால் நடை பராமரிப்புத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு தாக்கல் செய்யப்பட்டது. அதில், தேசிய அளவில் தமிழ் நாடு கோழியின எண்ணிக்கையில் முதலிடத்திலும், செம்மறியாட்டின் எண்ணிக்கையில் நான்காவது இடத்திலும், வெள்ளாட்டின் எண்ணிக்கையில் 7 வது இடத்திலும், பசுவின எண்ணிக்கையில் 13 வது இடத்திலும், எருமையின எண்ணிக்கையில் 14 வது இடத்திலும் இருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை ஐஐடி - இந்திய விமானப் படை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்:**

- இந்திய விமானப் படையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக இந்திய விமானப் படை மற்றும் ஐஐடி சென்னை ஆகியவை மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- இந்திய விமானப் படையின் தலைமை பராமரிப்பு தள தலைமை பொறியியல் அதிகாரி (சிஸ்டம்ஸ்) ஏர் கமோடோர் எஸ் பஹுஜா மற்றும் சென்னை ஐஐடி ஏரோஸ்பேஸ் இன்ஜினியரிங் துறைத் தலைவர் பேராசிரியர் எச் எஸ் என் மூர்த்தி ஆகியோர் தில்லி துக்ளகாபாத் விமானப்படை நிலையத்தில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

**செங்கல்பட்டில் ரூ.65 கோடி செலவில் சர்வதேச யோகா, இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனம் - முதல்வர் ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்:**

- செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 2,93,000 சதுர அடி பரப்பளவில் ரூ.65 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள உலகத் தரம் வாய்ந்த சர்வதேசயோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

- ரூ.65 கோடி செலவில், 50 ஏக்கர் நிலப் பரப்பு, 2.93 லட்சம் சதுர அடி கட்டிடம் கட்டும் பணிகள் 2020 ஜன.6 -ம் தேதி தொடங்கியது. கடந்த, 2021 செப். 30-ம் தேதி, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டன.

**2.4 லட்சம் பேருக்கு வேலை கிடைக்கும் ரூ. 19,000 கோடியில் ஜவுளி துறைக்கு புதிய திட்டம் - ஒன்றிய அரசு ஒப்புதல்:**

- ஒன்றிய அரசு தொழிற்துறையினரை ஊக்குவிக்கும் விதமாக பல அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் தற்போது ஜவுளித் துறையினரை ஊக்குவிக்கும் விதமாக புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது.
- ஜவுளித் துறையில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியினை ஊக்குவிக்கும் விதமாக ரூ. 19,000 கோடி மதிப்பிலான உற்பத்தி சார்ந்த மானிய திட்டத்திற்கு (பிஎல்ஐ) ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் 2 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

**கனிம உற்பத்தியில் 13.2 சதவீதம் ஒட்டு மொத்த வளர்ச்சி:**

- 2022 பிப்ரவரி மாதத்திற்கான சுரங்க மற்றும் குவாரித் துறையின் கனிம உற்பத்தியின் குறியீடு 123.2 ஆக இருந்தது, 2021 பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும் போது இது 4.5% அதிகமாகும்.
- இந்திய சுரங்க அலுவலகத்தின் தற்காலிக புள்ளி விவரங்கள் படி, முந்தைய ஆண்டின் இதே காலத்தை விட ஏப்ரல் - பிப்ரவரி, 2021- 22 கால கட்டத்திற்கான ஒட்டு மொத்த வளர்ச்சி 13.2 சதவீதம் அதிகரித்துள்ளது.
- பிப்ரவரி, 2022- ல் முக்கியமான கனிமங்களின் உற்பத்தி அளவு: நிலக்கரி 795 லட்சம் டன்கள், பழுப்பு நிலக்கரி 47 லட்சம் டன்கள், இயற்கை எரிவாயு (பயன்படுத்தப்பட்டது) 2515 மில்லியன் கியூ. மீ., பெட்ரோலியம் (கச்சா) 23 லட்சம் டன், பாக்சைட் 2120 ஆயிரம் டன், குரோமைட் 373 ஆயிரம் டன், காப்பர் 9 ஆயிரம் டன், தங்கம் 125 கிலோ, இரும்பு தாது 227 லட்சம் டன், ஈயம் 29 ஆயிரம் டன், மாங்கனீஸ் தாது 293 ஆயிரம் டன், ஜிங்க் 143 ஆயிரம் டன், சுண்ணாம்பு 333 லட்சம் டன், பாஸ்போரைட் 108 ஆயிரம் டன், மேக்னசைட் 10 ஆயிரம் டன், வைரம் 48 காரட்.



- பிப்ரவரி 2021- ஐ விட பிப்ரவரி 2021-ல் நேர்மறையான வளர்ச்சியைக் காட்டும் முக்கியமான தாதுக்களின் உற்பத்தியில் பின்வருவன அடங்கும்: வைரம் (43.4%), பழுப்பு நிலக்கரி (24.7%), இயற்கை எரிவாயு (U) (12.5%), பாஸ்போரைட் (9.9%), துத்தநாகம் 8.7%), பாக்சைட் (8.3%), நிலக்கரி (6.6%), இரும்புத் தாது (5.9%) மற்றும் மேக்னசைட் (0.6%). எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டும் முக்கியமான தாதுக்களின் உற்பத்தியில் பின்வருவன அடங்கும்: சுண்ணாம்பு (-0.5%), தங்கம் (-2.1%), பெட்ரோலியம் (கச்சா) (-2.2%), ஈயம் (-14.0%), மாங்கனீசு தாது (-17.3%), காப்பர் (-19.8%) மற்றும் குரோமைட் (-33.1%).

**சுகாதாரத் துறை மூலம் காச நோய் ஒழிப்பு திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவு:**

- இந்தியாவில் காச நோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.
- அதன் படி, 2025- ம் ஆண்டுக்குள் காச நோயை முழுவதும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் தேசிய காச நோய் ஒழிப்புத் திட்டம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழகத்தில் நோயாளிகளைக் கண்டறிதல், கூட்டு மருந்து சிகிச்சை, தொடர் கண்காணிப்பு ஆகியவற்றால் காச நோயைக் குணப்படுத்தும் இலக்கு உயர்ந்து வருகிறது.
- இந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்படுபவர்களில் 84 சதவீதம் பேர் முதல் சிகிச்சையிலும், மீதமுள்ளவர்கள் தொடர் சிகிச்சைகளிலும் குணமடைகின்றனர்.
- மேலும், சிகிச்சை காலத்தில் நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து அளிக்க நிதியுதவியும் வழங்கப்படுகிறது.
- இந்நிலையில், தேசிய நல்வாழ்வுக் குழுமத் திட்ட இயக்குநரின் பரிந்துரை அடிப்படையில் இவை அனைத்தும் பொது சுகாதாரத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.
- இதன் மூலம் மாநில பொது சுகாதாரத் துறை இயக்குநருக்கு, தேசிய காச நோய் ஒழிப்புத் திட்ட செயலாக்கம் மற்றும் அது சார்ந்த முக்கிய முடிவுகளை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**சர்வ தேச நீச்சல் போட்டியில் நடிகர் மாதவன் மகன் வேதாந்த் வெள்ளி பதக்கம் வென்றார்:**

- தமிழ் திரையுலகில் அறிமுகமான நடிகர் மாதவன், இந்தியிலும் பல்வேறு திரைப்படங்களில் நடித்து பான் இந்தியா நடிகராக (Pan india actor) திகழ்கிறார். இவரது மகன் வேதாந்த் மாதவன் நீச்சல் வீரராக திகழ்கிறார்.
- சர்வதேச அளவில் பல்வேறு நீச்சல் போட்டிகளில் பங்கேற்று விருதுகளை குவித்து வருகிறார். அந்த வகையில், டென்மார்க் தலை நகர் கோபன் ஹேகனில் (copenhagen) நடைபெற்ற டேனிஷ் நீச்சல் போட்டியில் பங்கேற்ற வேதாந்த் மாதவன், 1500 மீட்டர் free பிரிவில் வெள்ளி பதக்கம் வென்றார். டென்மார்க் ஓபன் நீச்சல் போட்டியின் 200 மீட்டர் Fly பிரிவில் இந்தியாவின் முன்னணி நீச்சல் வீரர் சஜன் பிரகாஷ் தங்கம் வென்றார்.

**டென்மார்க் ஓபன் நீச்சல் போட்டி - நடிகர் மாதவனின் மகன் வேதாந்த் தங்கப் பதக்கம் வென்று அசத்தல்:**

- டென்மார்க்கின் கோபன் ஹேகன் நகரில் டேனிஷ் ஓபன் நீச்சல் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான 800 மீட்டர் பிரிவில் இந்திய வீரர் வேதாந்த், பந்தய தூரத்தை 8:17.28 விநாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார்.
- நடிகர் மாதவனின் மகனான வேதாந்த் வெல்லும் 2- வது பதக்கம் இதுவாகும். 1500 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் வேதாந்த் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியிருந்தார். வேதாந்த், கடந்த ஆண்டு நடந்த லத்வியா ஓபனில் வெண்கலப் பதக்கமும், அதே ஆண்டில் நடந்த ஜூனியர் தேசிய நீச்சல் சாம்பியன் ஷிப்பில் 4 வெள்ளி, 3 வெண்கல பதக்கமும் வென்று அசத்தியுள்ளார்.

**சிறந்த திருநங்கை விருது வழங்கி சிறப்பித்தார் முதல்வர் மு.க. ஸ்டாலின்:**

- 'சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருநங்கைகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்து முன் மாதிரியாக திகழும் திருநங்கை ஒருவரை சிறப்பிக்கும் வகையில் 2022 -ம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதை விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை அ. மர்லிமாவுக்கு வழங்கினார்.

**டிட்கோ - அமெரிக்க நிறுவனம் ஒப்பந்தம் தமிழகத்தில் ரூ.141 கோடி முதலீட்டில் விமான இயந்திர ஆராய்ச்சி மையம்:**

- தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) அமெரிக்காவில் விமான இயந்திரம் தயாரிக்கும் ஜிஇ ஏவியேஷன் நிறுவனத்துடன் இணைந்து ₹141 கோடி முதலீட்டில், விமான இயந்திர தொழில் நுட்ப ஆராய்ச்சி மையம் அமைக்க ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.
- இந்த தொகையை டிட்கோ, ஜிஇ ஏவியேஷன் நிறுவனங்கள் 2 கட்டங்களாக முதலீடு செய்ய உள்ளன.
- விமான எந்திரங்கள் உள்பட பல்வேறு உதிரி பாகங்களில் தொழில் நுட்ப மேம்பாடு பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

**சர்வதேச செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர்:**

- ஸ்பெயினில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த குகேஷ் சாம்பியன் பட்டம் வென்றார்.
- 13 நாடுகளில் இருந்து 183 வீரர்கள் பங்கேற்ற செஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்றது. இதில் தொடக்கம் முதலே தமிழகத்தைச் சேர்ந்த குகேஷ் முன்னிலை வகித்தார். 9 சுற்றுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டியில், ஒன்றில் கூட குகேஷ் தோல்வியடைவில்லை.
- 7 வெற்றி, இரண்டு டிரா என மொத்தம் 8 புள்ளிகளுடன் அவர் முதலிடம் பிடித்தார். மற்றொரு தமிழக வீரர் பிரக்ஞானந்தா மூன்றாவது இடம் பிடித்தார்.

**ஒன்றிய அரசின் டிரோன் தயாரிக்கும் திட்டத்திற்கு அண்ணா பல்கலை தக்ஷா குழு தேர்வு:**

- நாட்டில் டிரோன்கள் தயாரிப்பு மற்றும் வடிமைப்பில் முன்னணியில் உள்ள 5 நிறுவனங்களை ஒன்றிய அரசு தேர்வு செய்துள்ளது. அதில் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் தக்ஷா குழு, ஒன்றிய அரசின் ஊக்கத் தொகையை பெறவும், ஒன்றிய விமான போக்குவரத்து துறையுடன் இணைந்து தேவையின் அடிப்படையில் டிரோன்கள் தயாரிக்கும் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- அதே போல் சென்னையை சேர்ந்த ஜூப்பா ஜியோ நேவிகேஷன் டெக்னாலஜிஸ் என்கிற டிரோன்களுக்கான உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**உலகப் பாரம்பரிய நீர்ப் பாசன கட்டமைப்பின் 3 விருதுகளுக்கு தமிழக அரசு தேர்வு:**

- சர்வதேச நீர்ப் பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் (ஐசிஐடி) ஒவ்வோர் ஆண்டும் உலகப் பாரம்பரிய நீர்ப் பாசனக் கட்டமைப்புகள் மற்றும் நீர் சேமிப்பு விருதுகளை அறிவிக்கிறது.
- இந்திய தேசிய நீர்ப் பாசனம் மற்றும் வடிகால் குழுமம், ஒவ்வோர் ஆண்டும் இந்திய மாநிலங்களில் இருந்து, தகுதியான முன் மொழிவுகளை ஐசிஐடி அமைப்புக்கு பரிந்துரைக்கிறது.
- இதன் படி, கடந்த ஆண்டு ஜூலை மாதம் தமிழக நீர் வளத் துறை சார்பில் கல்லணை, காளிங்க ராயன் அணைக்கட்டு, வீராணம் நீர்த் தேக்கம், பேச்சிப் பாறை அணை, மதுராந்தகம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகிய 6 நீர்த் தேக்கக் கட்டமைப்புகளை உலகப் பாரம்பரிய கட்டமைப்புகளாக அறிவிக்கக் கோரி விண்ணப்பிக்கப்பட்டது.
- இதன் தொடர்ச்சியாக, உலகப் பாரம்பரிய நீர்ப் பாசனக் கட்டமைப்புகளுக்கான விருதுகளுக்கு கல்லணை, வீராணம் ஏரி, காளிங்க ராயன் அணைக்கட்டு ஆகிய 3 கட்டமைப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு நாட்டுக்கும் 4 விருதுகள் சர்வதேச அமைப்பால் ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு இந்தியாவுக்கு 4 விருதுகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில், தமிழகம் 3 விருதுகள் பெறுவது குறிப்பிடத்தக்கது.
- கல்லணை: வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்லணை கி.பி. 2 -ம் நூற்றாண்டில் சோழ மன்னன் கரிகாலனால் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பழமையான அணையாகும். இது உலகின் 4 -வது பழமையான நீர் மாற்று அமைப்பு அல்லது நீர் ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பாகும். இன்னும் பயன்பாட்டில் உள்ள பழமையான கட்டமைப்பாகும்.
- வீராணம் நீர்த்தேக்கம்: கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் நீர்த் தேக்கம் 9- ம் நூற்றாண்டில் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் உருவாக்கப்பட்டது.
- காளிங்கராயன் அணைக்கட்டு: ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானி ஆற்றின் குறுக்கே காளிங்கராயன் அணைக்கட்டு 740 ஆண்டுகளுக்கு முன்பு கொங்கு பகுதி மன்னரான காளிங்கராயக் கவுண்டரால் கட்டப்பட்ட பழமையான அணையாகும்.

**இந்தியாவில் இன்னும் பயன்பாட்டில் உள்ள பழமையான கட்டமைப்பாகும்.**

- தமிழகத்துக்கான 3 விருதுகளும் வரும் நவம்பர் 7- ம் தேதி வழங்கப்பட உள்ளது. நீர்ப் பாசனக் கட்டமைப்புகளைப் பராமரித்தல் மற்றும் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் வகையில், சர்வதேச அமைப்பால் இத்தகு விருது வழங்கப்படுவது மாநிலங்களை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது.
- இதே போல, 2022 -ம் ஆண்டுக்கான விருதுக்கு தமிழகம் சார்பில் மேலும் 10 க்கும் மேற்பட்ட பாரம்பரிய நீர்ப் பாசனக் கட்டமைப்புகளுக்கான முன் மொழிவு அனுப்பப்பட உள்ளது.

**தமிழக பல்கலைக்கழக துணை வேந்தர்களை மாநில அரசே நியமிக்க அதிகாரம் – சட்டப் பேரவையில் மசோதா நிறைவேறியது:**

- தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்கள் நியமனம் மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் ஆளுநரால் மேற்கொள்ளப்பட்டது.
- இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக பல்கலைக் கழகங்களின் வேந்தராக உள்ள ஆளுநரே துணை வேந்தர்களை தேர்வு செய்து நியமித்ததால், பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன.
- இந்நிலையில், சென்னை பல்கலைக்கழகம் உள்ளிட்ட 13 பல்கலைக்கழங்களின் துணை வேந்தர்களை நியமிக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிப்பது தொடர்பான சட்டத் திருத்த மசோதாக்களை சட்டப் பேரவையில் உயர் கல்வித் துறை அமைச்சர் க. பொன் முடி நேற்று அறிமுகம் செய்தார். அவை முன்னவர் துரை முருகன், மசோதாக்களை பிரிவு வாரியாக இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான சட்டத் திருத்தத்தை முன் மொழிந்தார்.
- அதன் பின், பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கும் சட்ட மசோதாக்கள் பிரிவு வாரியாக ஆய்வு செய்யப்பட்டு, குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக மசோதா ஏற்கப்பட்டதாக பேரவைத் தலைவர் மு. அப்பாவு அறிவித்தார்.



**இந்தியாவின் முதல் தேவாங்கு வன உயிரின சரணாலயம்:**

- திருப்பூரில் நஞ்சராயன் குளம் தமிழ் நாட்டின் 17 வது பறவைகள் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்படும். இம்மையம் பறவைகள் குறித்த பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயல்படும்.
- காவிரி தெற்கு வன உயிரின சரணாலயம் என்ற புதிய வன உயிரின சரணாலயம் சுமார் 478 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் ஓசூர் கோட்ட அஞ்செட்டி, உரிகம் மற்றும் ஜவள கிரி சரகங்களின் வன நிலங்களை உள்ளடக்கி அமைக்கப்படும்.
- இந்தியாவின் முதல் தேவாங்கு வன உயிரின சரணாலயம் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய வனப்பகுதியில் அமைக்கப்படும்.
- இந்த அறிவிப்பிற்கான கணக்கெடுப்பு, மதிப்பீடுகளை உள்ளடக்கிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இந்த ஆண்டில் 15 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்படும்.

**50,000 இலவச விவசாய மின் இணைப்புகள், இ- வாகன சார்ஜிங் மையங்கள் - தமிழக அரசின் 19 முக்கிய அறிவிப்புகள்:**

- தமிழக சட்டப் பேரவையில் இன்று நடந்த எரி சக்தி துறை மீதான விவாதத்தின் போது, பல்வேறு முக்கிய அறிவிப்புகளையும், அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி விவரங்களையும் எரி சக்தி துறை அமைச்சர் செந்தில் பாலாஜி அறிவித்தார்.
- 50,000 விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள் சிறப்பு முன்னுரிமையில் உள்ள விவசாய விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் இலவச மின் இணைப்பு விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பரந்த அடித்தளத்தைக் கொண்ட மின் கோபுரங்கள் அமைப்பதற்கு பதிலாக மிகக் குறுகிய அடித்தளம் கொண்ட மிக உயர் மின்னழுத்த ஒற்றை மின் கம்பங்கள் தேவையான இடங்களில் அமைக்கப்படும்.
- தமிழகம் முழுவதும் 2000 மெகாவாட் " சூரிய மின் சக்தி பூங்கா " (Solar Power Park) நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- தமிழகத்தில் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கும் 10,809 உயரழுத்த மின் பாதைகளில் 30 சதவீதத்திற்கும் அதிகமாக விவசாய மின் இணைப்புகள் கொண்ட 1,686 ஊரக மின் பாதைகள் தேர்வு செய்யப்பட்டு அதனை விவசாய மின் இணைப்புகள் கொண்ட பாதை மற்றும் விவசாய மின் இணைப்புகள் இல்லாத பாதைகளாக பிரித்து விவசாய மின் இணைப்புகள் மட்டும் கொண்ட மின் பாதைகளை சூரிய ஒளி சக்தி மூலம் மின் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமான பழைய காற்றாலைகளை மாற்றி புதிய காற்றாலை மற்றும் சூரிய சக்தியுடன் இணைந்த (HYBRID) மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும்.
- தமிழ் நாட்டில் உயர் மின் அழுத்த கட்டமைப்பில் இணைக்கப்பட்டிருக்கும் மின் பாதைகளில் 273 மின் பாதைகள் (Feeders) தேர்வு செய்யப்பட்டு அப்பாதைகளில் உயர் மின்னழுத்த விநியோக அமைப்பின் மூலம் குறைந்த அளவு திறன் கொண்ட மின் விநியோக மின் மாற்றிகள் நிறுவப்படும்.
- தமிழகமெங்கும் 4,500 இடங்களில், ஒரே இடத்தில் இருக்கும் இரு மின் விநியோக மின் மாற்றிகளை உயர் மின்னழுத்த மின் விநியோக அமைப்பின் மூலம் பிரித்தல்.
- பழைய மற்றும் திறன் குறைந்த 54208 கி. மீ 33 கி. வோ மின் பாதைகளை புதிதாக மாற்றுதல்.
- திருவாரூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் சுசீந்திரம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள தேரோடும் நான்கு மாட வீதிகளில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளை புதை வடங்களாக மாற்றுதல் ரூ. 1,649 கோடி செலவில் 100 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.
- ரூ.166 கோடி மதிப்பீட்டில் மிக உயரழுத்த மின் மாற்றிகளின் திறனை மேம்படுத்துதல் மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் மையங்களை சாலையோரம் இருக்கும் துணை மின் நிலையங்களில் நிறுவுதல்.
- எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டத்தில் புகை போக்கி வளிமக் கந்தக நீக்கும் அமைப்பை (Flue Gas Desulpurisation-FGD) நிறுவுதல்.
- மின் தடங்கல் எதுவும் இல்லாமல் உயர் மின் அழுத்த பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மேலும் ஒரு புதிய Hot Line கோட்டம் உருவாக்குதல்.

- ஒருங்கிணைந்த மின் கட்டமைப்பு மேலாண்மைத் திட்டம் (Unified Network Management System) நிலக்கரியின் தரத்தை ஆய்வு செய்ய Thermo Gravimetric Analyser நிறுவுதல் பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் உற்பத்தி நிலையத்தில் 2 x 30 மெகா வாட் அலகுகளை நாப்தாவிலிருந்து திரவ நிலை எரிவாயு (R LNG) க்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தல்.
- திருமாக் கோட்டை எரி வாயு சுழலி மின் நிலையத்திற்கு மதனம் எரிவாயு வயலில் இருந்து எரிவாயு ஒதுக்கீடு பெறுதல்.

**அமிர்தாஞ்சன் நிறுவனத்துக்கு 'டெக்னோ 2022' விருது:**

- அமிர்தாஞ்சன் ஹெல்த் கேர் நிறுவனம் 128 ஆண்டுகள் பழமையான நிறுவனமாகும். இந்நிறுவனம் கரோனா பாதிப்பு கால கட்டத்தில் சிறந்த செயல் திறன் மற்றும் நீடித்த முன்னேற்றத்துடன் செயல்பட்டதால் அகில இந்திய உற்பத்தியாளர் அமைப்பால் (AIMO) சிறந்த கார்ப்பரேட் நிறுவனத்துக்கான 'டெக்னோ 2022' விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்க அமிர்தாஞ்சன் ஹெல்த் கேர் நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் எஸ். சம்பு பிரசாத் பெற்றுக் கொண்டார்.

**இலங்கை மக்களுக்கு உதவ தயார் நிலையில் தமிழ் நாடு அரசு: அனுமதி கோரி பேரவையில் தீர்மானம்:**

- இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவிட மத்திய அரசு அனுமதி அளிக்கக் கோரி சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தீர்மானத்தை முன் மொழிந்துள்ளார். அதைத் தொடர்ந்து சட்டப் பேரவையில் அத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது.
- மேலும் ரூ.28 கோடியில் 137 வகையான மருந்துப் பொருட்களை வழங்கவும்; ரூ.15 கோடியில் 500 டன் பால் பவுடர்களை இலங்கை மக்களுக்கு வழங்கவும் தமிழக அரசு தயாராக இருக்கிறது. இதைத் தொடர்ந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்படியாக இலங்கை மக்களுக்கு உணவு, அத்தியாவசிய பொருட்களை தமிழ் நாட்டில் இருந்து அனுப்பி வைக்க அனுமதி அளிக்க தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



**மாநில முதல்வர்கள், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் கூட்டு மாநாடு 2022:**

- ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு மாநில முதல்வர்கள், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் கூட்டு மாநாடு டெல்லி விஞ்ஞான் பவனில் நேற்று நடந்தது. இதில் பிரதமர் மோடி, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா மற்றும் யோகி ஆதித்ய நாத் (உபி), மம்தா பானர்ஜி (மேற்கு வங்கம்), ஜெகன் மோகன் ரெட்டி (ஆந்திரா) உள்ளிட்ட பல்வேறு மாநில முதல்வர்கள், ஒன்றிய, மாநில அமைச்சர்கள் பங்கேற்றனர்.
- தமிழகத்தின் சார்பாக மாநில சட்டத் துறை அமைச்சர் ரகு பதியும், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரியும் கலந்து கொண்டனர்.
- மாநாட்டை தொடங்கி வைத்து பிரதமர் மோடி பேசியதாவது, நமது நாட்டில், அரசியல் சாசனத்தின் பாதுகாவலனாக நீதித் துறை பங்காற்றி வரும் நிலையில், சட்ட மன்றங்கள் மக்களின் விருப்பங்களை பிரதிபலித்து வருகின்றன.
- நீதி வழங்குதலில் மக்களின் உரிமை இதன் மூலம் வலுப்படும். உள்ளூர் மொழிகள் தொழில் நுட்பக் கல்வியிலும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**லூலூ குழும ஒப்பந்தம் – தமிழ் நாடு:**

- மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக கொள் முதல் செய்யப்படும் வேளாண் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான உணவுப் பதப்படுத்துதல் மற்றும் தளவாடங்கள் மையங்களை லூலூ குழுமம் நிறுவ உள்ளது.
- தமிழகத்தில் வணிக வளாகங்கள், பல் பொருள் அங்காடிகள் மற்றும் உணவு தளவாடப் பூங்கா ஆகியவற்றை நிறுவுவதற்காக லூலூ குழுமம் தமிழகத்தில் 3,500 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான முதலாவது வணிக வளாகமானது சென்னையில் 2024 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.
- அதே சமயம் முதல் பல்பொருள் அங்காடியானது கோயம்புத்தூரிலுள்ள லட்சுமி மில்ஸ் வளாகத்தில் நிறுவப்படும்.

**துறைப் பரிமாற்றம்:**

- R.S. ராஜ கண்ண ப்பன் மற்றும் S.S. சிவசங்கர் ஆகிய அமைச்சர்களின் துறைகள் இடம் மாற்றப்பட்டுள்ளன.
- இராஜ கண்ணப்பன் கையாண்டு வந்த போக்குவரத்து, தேசிய மயமாக்கப்பட்டப் போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகனச் சட்டத் துறையானது S.S. சிவ சங்கரிடம் ஒப்படைக்கப்பட்டது.

- சிவ சங்கர் கையாண்டு வந்த "பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன், மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்" என்ற துறையானது இராஜ கண்ணப்பனிடம் ஒப்படைக்கப்படும்.

**சாகித்ய அகாடமி உறுப்பினர் பதவி**

- எழுத்தாளர் இந்திரா பார்த்த சாரதிக்கு சாகித்ய அகாடமி தனது உறுப்பினர் பதவியை வழங்கியது.
- இந்தியாவின் மிக உயரிய இலக்கிய கௌரவமான இது புகழ் பெற்ற சிறந்த இலக்கியத் தகுதியுடைய அறிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.
- ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அகாடமி உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆக மட்டுமே வரையறுக்கப் பட்டுள்ளது.
- இந்திரா பார்த்த சாரதி பத்மஸ்ரீ விருது பெற்றவர் ஆவார். இவர் 16 நாவல்கள், 10 நாடகங்கள் மற்றும் சிறுகதைகள் மற்றும் கட்டுரைகளின்தொகுப்புகள் போன்றவற்றை வெளியிட்டுள்ளார்.
- இவர் 1977 ஆம் ஆண்டில் குருதிப் புனல் என்ற தனது நாவலுக்காக சாகித்ய அகாடமி விருதைப் பெற்றார்.
- சாகித்ய அகாடமி விருது மற்றும் சங்கீத நாடக அகாடமி விருது ஆகிய இரண்டு விருதுகளையும் பெற்ற ஒரே தமிழ் எழுத்தாளர் இவரே ஆவார்.

**சென்னை மெட்ரோ இரயில் நிலையத்தின் மத்தியச் சதுக்கம்:**

- 'மத்தியச் சதுக்கம்' வளாகத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்த வசதியானது இந்தப் பகுதியில் அமைந்துள்ள சில முக்கியமானக் கட்டிடங்களை இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஒரு பல்முனை மையமாகவும் செயல்படுகிறது.

**கஞ்சா வேட்டை - 2.0**

- கஞ்சா மற்றும் பான் மசாலாப் பொருட்கள் விற்பனைக்கு எதிராக மாநிலம் முழுவதும் ஒரு மாத கால அளவிலான சோதனையை மேற்கொள்ளுமாறு காவல் துறை தலைமை இயக்குநர் சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார்.
- இதற்கு கஞ்சா வேட்டை - 2.0 நடவடிக்கை என்று பெயரிடப்பட்டுள்ளது.
- தற்போதைய இந்த நடவடிக்கையானது மார்ச் 28 முதல் ஏப்ரல் 27 வரை நடைபெற உள்ளது.
- முன்பு, கஞ்சா மற்றும் பான் மசாலாப் பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்வதற்கு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2022 ஆம் ஆண்டு ஜனவரி வரையில் இதே போன்ற ஒரு நடவடிக்கையினைக் காவல் துறை மேற்கொண்டது.

## முக்கிய தினங்கள்

1. **சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் - ஏப்ரல் 02**

- இத்தினமானது 1967 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் அனுசரிக்கப்படுகிறது.
- இது சர்வதேச இளம் நபர்களுக்கான புத்தக வாரியத்தினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- இந்த வாரியமானது, சிறுவர் புத்தகங்கள் மீதான கவனத்தை ஈர்ப்பதற்காகவும் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவும் செயல்படும் ஒரு சர்வதேச மற்றும் இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.

2. **உலக மன இறுக்க விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 02**

- இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் ஆண்டு தோறும் அனுசரிக்கப் படுகிறது.
- உலகம் முழுவதும் உள்ள மன இறுக்கக் குறைபாட்டு நோயால் (Autism) பாதிக்கப்பட்ட நபர்கள் குறித்த விழிப்புணர்வை குடி மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக வேண்டி இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது ஐக்கிய நாடுகளின் உலகத் தகவல் தொடர்புத் துறை மற்றும் ஐக்கிய நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறை ஆகியவற்றால் நடத்தப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அனைவருக்கும் உள்ளார்ந்த தரமான கல்வி " (Inclusive Quality Education for All) என்பதாகும்.


**வன்னியர் உள் இட ஒதுக்கீடு தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு:**

- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவிற்குட்பட்ட வன்னியர் சமுதாயத்தினருக்கு 10.5 சதவீத உள் இட ஒதுக்கீடு வழங்கும் வகையில், கடந்த ஆண்டு தமிழகத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்தை (தமிழ் நாடு சிறப்பு இட ஒதுக்கீட்டுச் சட்டம் 2021) ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.
- அரசு வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களின் சேர்க்கையிலும் இதன் மூலம் உள் இட ஒதுக்கீடு வழங்கப்பட இருந்தது.
- வன்னியர் சமூகத்தின் மீது ஒப்பீட்டளவிலான ஒரு பின் தங்கிய நிலையைக் காட்டச் செய்வதற்குப் போதுமான தரவுகள் எதுவும் இல்லாமல் எண்களின் அடிப்படையில் மட்டுமே இந்தச் சட்டமானது கொண்டு வரப்பட்டது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

- மேலும் நீதிமன்றமானது இந்த ரீதியில் சட்டம் இயற்றுவதற்கு மாநிலத்திற்கு எந்த வித தடையும் இல்லை என்றும் கூறியது. அவ்வாறு இட ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றப் படுகையில் சாதி ஒரு அடிப்படையாக இருக்கலாம், ஆனால் அது மட்டுமே அடிப்படையாக இருக்கக் கூடாது என்றும் அது கூறி உள்ளது.

**ஆனை கட்டி குடியிருப்பாளர்**:

- முதுமலை புலிகள் காப்பகப் பாதுகாப்பு மண்டலத்தில் உள்ள சிகூரில் உள்ள ஆனை கட்டி என்ற பகுதியில் வசிக்கும் பழங்குடியினர் ஒருவர், 41 பெண்கள் தண்ணீர் சாம்பியன்களில் ஒரு நபர் ஆவார்.
- இது இந்திய அரசு மற்றும் UNDP-SIWI நீர் ஆளுமை வசதி ஆகியவற்றின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.




**பாலின ஆய்வகம்:**

- சென்னை பெரு நகர மாநகராட்சியானது ஒரு பாலின ஆய்வகத்தைத் திறந்து வைத்து உள்ளது.
- இந்தியாவிலேயே ஒரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் தொடங்கப்பட்ட இது போன்ற முதல் முயற்சி இதுவாகும்.
- இந்த வசதியைத் தொடங்குவதற்கான முதல் கட்டமாக மூன்று நிபுணர்களை இந்த அமைப்பு நியமித்துள்ளது.
- அனைவரும் பெண்களாக நியமிக்கப்பட்டுள்ள இந்த மூன்று நிபுணர்கள் குழு, பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தச் செய்வதற்கான மாற்றங்களை பரிந்துரைப்பதற்காக ஒவ்வொரு பொது உள் கட்டமைப்புத் திட்டத்தையும் மதிப்பாய்வு செய்ய உள்ளது.

**திருத்தப்பட்ட MGNREGA ஊதியங்கள்:**

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதிச் சட்டத்தின் கீழ் புதிய ஊதிய விகிதங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இது 2022 - 23 ஆம் நிதியாண்டுக்கான ஊதிய விகிதம் ஆகும். 34 ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களுள், 21 ஒன்றியப் பிரதேசங்கள் 5 சதவீதத்திற்கும் குறைவான ஊதிய விகித உயர்வைப் பெற்றுள்ளன.

- 10 மாநிலங்களில் 5 சதவீதம் ஊதிய விகிதமானது உயர்த்தப்பட்டுள்ளது.
- மிசோரம், மணிப்பூர், திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கு எவ்வித உயர்வுகளும் வழங்கப்படவில்லை.
- ஊதிய விகிதங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த மாற்றமானது ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2022 - 23 ஆம் ஆண்டில் கோவா மாநிலத்தில் ஊதிய விகித உயர்வானது 7.14 சதவீதம் அதிகரித்து ஒரு நாளைக்கு ரூ.315 ஆக உயர்ந்துள்ளது.
- மேகாலயா மாநிலத்தில் ஊதிய விகிதமானது, 1.77 சதவீதம் அதிகரித்து ஒரு நாளைக்கு ரூ.230 என்ற அளவில் மிகக் குறைந்த உயர்வையே கண்டுள்ளது.
- தமிழ் நாடு, அசாம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் 2 சதவீதம் முதல் 3 சதவீதம் என்ற அளவிலான உயர்வினைக் கண்டுள்ளன.
- ஒரு நாளைக்கு ரூ. 331 என்ற விகிதத்தில் அதிக ஊதிய விகிதத்தை பெறும் ஹரியானா மாநிலத்தைத் தொடர்ந்து, கோவா ரூ. 315 என்ற விகிதத்திலும், அதைத் தொடர்ந்த இடத்தில் கேரளா, கர்நாடகா மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ஆகிய ஐந்து ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்கள் உள்ளன.
- குறைந்த ஊதிய விகிதம் கொண்ட 5 ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்கள் என்ற பிரிவில் திரிபுரா (ரூ.212), பீகார் (ரூ 210) ஆகியவையும் அதைத் தொடர்ந்து ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களும் உள்ளன.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ஆனந்தி கோபால் ஜோஷி:

- பம்பாய் மாகாணத்தின் ஆனந்தி கோபால் ஜோஷியின் 157 வது பிறந்த நாள் 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- மேற்கத்திய மருத்துவத்தில் பயிற்சி பெற்ற இந்தியாவின் முதல் பெண் மருத்துவர்களில் இவரும் ஒருவர் ஆவார்.
- இவர் அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் மகளிர் மருத்துவக் கல்லூரியில் தனது 21 வது வயதில் மருத்துவப் பட்டம் பெற்றார்.

## முக்கிய தினங்கள்:

### இராணுவ மருத்துவப் படை நிறுவன தினம் - ஏப்ரல் 03

- இராணுவ மருத்துவப் படையின் நிறுவன தினத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- வங்காள மாகாண மருத்துவச் சேவை ஆனது 1764 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இது இந்தியாவில் உள்ள மூன்று மாகாணங்களின் முதல் ராணுவச் சேவை அமைப்பு ஆகும்.
- இந்திய மருத்துவச் சேவை, இந்திய மருத்துவத் துறை மற்றும் இந்திய மருத்துவ மனைப் படை ஆகியவை இணைக்கப்பட்டு 1943 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 ஆம் தேதி அன்று இந்திய இராணுவ மருத்துவப் படை உருவாக்கப்பட்டது.
- இந்திய ராணுவ மருத்துவப் படையானது சுதந்திரத்திற்குப் பிறகு ராணுவ மருத்துவப் படை என மறு பெயரிடப்பட்டது.
- இராணுவ மருத்துவப் படையின் முழக்கம் சர்வே சாந்து நிராமயா (அனைவரும் நோய் மற்றும் இயலாமையிலிருந்து விடுபடலாம்) என்பதாகும்.






**தமிழ் நாடு பொதுச் சுகாதாரச் சட்டம்:**

- 1939 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொதுச் சுகாதாரச் சட்டத்தின் கீழ், தமிழக அரசு தான் விதித்த அறிக்கையினை திரும்பப் பெற்றுள்ளது. இது குறிப்பிடப்பட்ட அனைத்து அலுவலகங்களிலும் கோவிட்- 19 தடுப்பு மருந்துச் செலுத்திய நபர்களே உள்ளனர் என்பதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை என்பது மேற்கொள்ளப்பட்டது. *
- பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் 18 அன்று வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பினை திரும்பப் பெற்றது.

**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்:**

**கிராமிய விருதுகள் 2022:**

- இசைத் துறையின் மிக உயரிய விருதான கிராமிய விருதுகள் (2022), தகுதி வாய்ந்த இசைக் கலைஞர்களுக்கு லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்ற ஒரு விழாவில் வழங்கப்பட்டது.
- இந்த முறை விருது வழங்கும் விழா நடைபெறும் இடமானது அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸிலிருந்து லாஸ் வேகாஸ் நகருக்கு இடம் மாற்றப்பட்டது.

- டிரிவோர் நோவா (Trevor Noah) இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். ஒலிவியா ரோட்ரிகோ (Olivia Rodrigo), சிறந்தப் புதுமுக கலைஞர் என்ற பிரிவிலும் சிறந்த பாப் குரலிசைப் பாடல் என்ற பிரிவிலும் கிராமிய விருதுகளை வென்றார்.
- டோஜா கேட் மற்றும் SZA சிறந்த பாப் பாடல் இரட்டையர்/ குழு (Pop Duo/ Group) என்ற பிரிவில் விருதினை வென்றார்.
- இந்த ஆண்டின் சிறந்தப் பாடலுக்கான விருதினை ஜான் பட்டிஸ்டே பெற்றார்.

**முக்கிய தினங்கள்:**

**சுரங்க விழிப்புணர்வு மற்றும் சுரங்க நடவடிக்கைகளில் உதவிக்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 24:**

- கண்ணி வெடிகள் பற்றி ஒரு விழிப்பணர்வை ஏற்படுத்துவதும் அவற்றை ஒழிப்பதை நோக்கிய முன்னேற்றத்தினையும் இத்தினமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "சுரங்க நடவடிக்கை" என்பது கண்ணி வெடிகள் மற்றும் போரில் வெடிக்காத சில மருந்துகள் போன்றவற்றை அப்புறப்படுத்துவதையும், அபாயகரமானப் பகுதிகளை அடையாளம் கண்டு அதனை வேலியிடுவதையும் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் சுரங்க நடவடிக்கை சேவை என்ற அமைப்பானது "பாதுகாப்பான நிலம், பாதுகாப்பானப் படிகள் (பாதைகள்) பாதுகாப்பான இல்லம்" என்ற கருத்துருவின் கீழ் இந்த தினத்தை அனுசரிக்கிறது.

**சர்வதேச மனசாட்சி தினம் - ஏப்ரல் 05**

- இத்தினமானது, மக்களைச் சுயமாக சிந்திக்கவும், தங்களது மனசாட்சியைப் பின்பற்ற செய்யவும், நல்ல செயல்களைச் செய்யவும் நினைவூட்டுகிறது.
- முதலாவது சர்வதேச மனசாட்சி தினமானது 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.

**தேசியக் கடல் சார் தினம் - ஏப்ரல் 05**

- இந்த ஆண்டு 59 வது தேசியக் கடல் சார் தினமாகும். உலகின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்கு சரக்குப் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக வேண்டி நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, பாதுகாப்பான மற்றும் உறுதியான, சுற்றுச் சூழலுக்கு உகந்த ஒரு அணுகு முறையாக, கண்டங்களுக்கு இடையேயான வணிகம் மற்றும் உலகப் பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பது குறித்த விழிப்புணர்வை எடுத்துரைக்கச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது. இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Sustainable Shipping beyond Covid-19" என்பதாகும்.

## முக்கிய தினங்கள்:

### சர்வதேச வளர்ச்சி மற்றும் அமைதிக்கான விளையாட்டுத் தினம் - ஏப்ரல் 06

- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் இந்த தினமானது அறிவிக்கப்பட்டது.
- மனித உரிமைகள், சமூகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகிய துறைகளில் விளையாட்டு ஏற்படுத்தக் கூடிய நேர்மறையான தாக்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை அதிகளவில் அங்கீகாரம் அளிப்பதை இந்தத் தினம் குறிக்கிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் உலகளாவிய கருத்துரு, "அனைவருக்குமான நிலையான மற்றும் அமைதியான ஒரு எதிர்காலத்தைப் பாதுகாப்பது: விளையாட்டின் பங்களிப்பு" என்பதாகும்.




### தாய்க்குரிய நோய்த் தடுப்பாற்றல் பகுப்பாய்வு:

- சென்னையில் உள்ள தமிழ் நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் தாய்க்குரிய நோய்த் தடுப்பாற்றல் பகுப்பாய்வு இயந்திரம் மற்றும் மாநில உடல் நல மன்றத் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- இது மருத்துவமனையில் முதன்மை உடல் நலப் பரிசோதனை என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். இதன் மூலம் 11- 14 வாரங்கள் கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு, அவர்கள் சுமக்கும் பல மரபணுக் குறைபாடுகள் எதுவும் உள்ளதா எனப் பரிசோதிக்க முடியும்.
- பின்னர், தாய் மார்களும் அவர்களது குடும்பத்தினரும் கர்ப்பம் தரிக்க வேண்டுமா அல்லது கலைக்க வேண்டுமா என்பதை முடிவு செய்யலாம். இயல்பிற்கு முரணாகப் பிறக்கும் குழந்தைகளை இது தடுக்க உதவும்.

### 3 வது தேசிய நீர் விருதுகள்:

- இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மூன்றாவது தேசிய நீர் விருதுகளை வழங்கி உள்ளார்.
- நீர் வள மேலாண்மைத் துறையில் முன் மாதிரியான ஒரு பணிக்காக இது வழங்கப் படுகிறது. மேலும் அவர் 'ஜல் சக்தி அபியான்: 2022 ஆம் ஆண்டிற்கான மழை நீரைச் சேமியுங்கள் பிரச்சாரம்' என்ற பிரச்சாரத்தினைப் புது தில்லியில் தொடங்கினார்.

- உத்தரப் பிரதேசம் முதல் பரிசையும், அதனைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் தமிழ் நாடு ஆகிய மாநிலங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசினையும் பெற்றுள்ளன.
- தமிழ் நாட்டின் மதுரை மாநகராட்சி, "சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு" பிரிவில் விருது பெற்ற மாநகராட்சிகளுள் ஒன்றாகும்.
- செங்கல்பட்டு மாவட்டத்தின் வெள்ளப் புத்தூர் ஊராட்சி தமிழ் நாடு "சிறந்த கிராம ஊராட்சி" என்ற பிரிவில் விருது பெற்ற ஊராட்சிகளுள் ஒன்றாகும்.
- புதுச்சேரி காவேரிப் பட்டினம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர் அமலோற்பவம் லூர்து அகாடமி, உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள அமிட்டி இன்டர்நேஷனல் பள்ளி ஆகியன சிறந்தப் பள்ளி என்ற பிரிவில் விருதுகளை வென்றன.

**சன்சத் ரத்னா விருது 2022 – 12 வது பதிப்பு:**

- இது பிரைம் பாயின்ட் என்ற அறக்கட்டளையால் வழங்கப்பட்டது.
- சன்சத் ரத்னா விருதுகள் குழுவுக்கு நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தலைவராகவும் இந்தியாவின் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் டி எஸ் கிருஷ்ண மூர்த்தி இணைத் தலைவராகவும் இருந்தனர்.
- PRS இந்தியா என்ற ஒரு அமைப்பு வழங்கிய தரவுகளின் அடிப்படையில் 17 வது மக்களவையின் தொடக்கத்தில் இருந்து 2021 ஆம் ஆண்டின் குளிர் காலக் கூட்டத் தொடர் முடியும் வரை அவர்களின் ஒட்டு மொத்தச் செயல் திறனின் அடிப்படையில் விருது பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்தப் பதிப்பின் புதிய அம்சமான வாழ்நாள் சாதனையாளர் ஏபிஜே அப்துல் கலாம் விருதானது தமிழ் நாட்டின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சரான எச் வி ஹண்டேவுக்கு வழங்கப்பட்டது.
- கர்நாடக முன்னாள் முதல்வர் வீரப்ப மொய்லிக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.
- இந்தப் பதிப்பில் மொத்தம் 11 பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**முக்கிய தினங்கள்:**

**உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07:**

- உடல் நலம் தொடர்பான பிரச்சனைகளை விவாதிக்கச் செய்யும் நோக்கத்துடன் இது கொண்டாடப் படுகிறது.
- 1948 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உலக சுகாதார அமைப்பின் நினைவாக 1950 ஆம் ஆண்டில் முதல் உலக சுகாதார தினம் அனுசரிக்கப்பட்டது.

- "நமது கிரகம், நமது ஆரோக்கியம்" என்பது இந்த ஆண்டிற்கான கருத்துரு ஆகும்.

**அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 ஒதுக்கீடு:**

- 2020 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட மாநிலச் சட்டத்தினை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அதன் செல்லுபடியாகும் தன்மையை சென்னை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது.
- இதன் படி அரசுப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்று தேசிய தகுதி நுழைவுத் தேர்வில் (NEET) தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மருத்துவச் சேர்க்கையில் 7.5% உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும். இது கலையரசன் குழு அளித்த பரிந்துரைகளின் பேரில் அளிக்கப் பட்டது.




**முக்கிய தினங்கள்:**

**சர்வதேச ரோமானி தினம் - ஏப்ரல் 08**

- 1990 ஆம் ஆண்டில் முதன் முதலில் அறிவிக்கப்பட்ட பிறகு, ஒவ்வோர் ஆண்டும் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- சர்வதேச ரோமானியத் தினமானது உலகளவில் உள்ள ரோமானிய சமூகங்கள் மீதான பாகுபாடுகள் குறித்து கவனத்தை ஈர்க்கிறது.
- இது அனைவரின் மனித உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும் மற்றும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது.

**நடமாடும் வங்கிகள் - தமிழ்நாடு**

- 34 நடமாடும் வங்கிகள் அறிமுகப்படுத்தப்படும் என்று தமிழ் நாட்டின் கூட்டுறவு வசதித் துறை அமைச்சர் ஐ. பெரிய சாமி அறிவித்தார்.
- தமிழ் நாடு மாநில உயர் நிலைக் கூட்டுறவு வங்கி மற்றும் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் சார்பில் இது அறிமுகப்படுத்தப்படும்.
- இவை ஏடிஎம் (தானியங்குகிப் பண இயந்திரம்) சேவைகள் உட்பட மேலும் பல முக்கிய வங்கிச் சேவைகளை வழங்கும்.

**சென்னை மாநகராட்சி நிதி நிலை அறிக்கை 2022**

- சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், 6 ஆண்டுகளுக்குப் பிறகு, மாநகராட்சி நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

மேயர் வெளியிட்ட சில முக்கிய அறிவிப்புகள்:

- மாநகராட்சி நடத்தும் பள்ளிகளில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும்.
- பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்படும்.
- பள்ளிகளில் ஆங்கிலம் பேசுவதை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- நிர்பயா என்ற நிதியின் கீழ் மாணவிகளுக்கு சானிட்டரி நாப்கின்கள் (மாதவிடாய்த் துணிகள்) வழங்கப்படும்.
- 70 சென்னை மாநகராட்சி உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு இணைய தள இணைப்பு வசதி வழங்கப்படும்.




















DAILY CURRENT
AFFAIRS IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


BEST ARTICLES IN TAMIL
FOR EXAM PREPARATION
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB etc.
ARTICLE


DOWNLOAD
Admit Card


ARTICLES
IN TAMIL